சமர்ப்பணம் என்னும் வார்த்தையை நாம் மிகச் சாதாரணமாகக் கையாள்கிறோம். நீண்ட கால அன்னை அன்பர்கள் யாரிடம் எது கேட்டாலும் இறுதியில் அவர்கள் சொல்வது சமர்ப்பணம் செய் என்பது தான் . சமர்ப்பணத்தால் மலையை நகர்த்த முடியும், எதையும் நொடியில் செய்து விட முடியும் என்று சொல்பவர்களையும் அவர்களுக்கு நடந்ததாக சொல்வதையும், பார்த்து, கேட்டு நான் ஆச்சரியப்படுகிறேன், பொறாமைப்பட்டும் இருக்கிறேன். அவர்கள் எல்லாம் எப்படி அன்னையை, அருளை , அவர்கள் பிடியில் வைத்திருக்கிறார்கள் என்று. அப்படிப்பட்டவர்களுக்கு நான் இனி பகிர்ந்து கொள்ளப்போவது பொருந்தாது.

இதில் குறிப்பாக சமர்ப்பணம் - Thy Will - உன் திருவுள்ளம் நிறைவேறட்டும் என்று சொல்பவர்கள் உண்டு. அதற்கு கர்மயோகி சொல்லும் ஒரு உதாரணத்தை எடுத்து கொள்கிறேன். என் மகளின் திருமணத்தை சமர்ப்பணம் செய்கிறேன் என்று சொல்பவர்க்கு திருமணம் நடக்காமல் இருக்கவே வாய்ப்பு அதிகம். காரணம் அன்னை திருமணத்தை விரும்பவில்லை. அதே போல படிப்பை சமர்ப்பணம் செய்பவர்க்கு படிப்பு வராமல் போகலாம். காரணம் அன்னை விரும்புவது self-education. அதனால் Thy Will என்று சொல்பவரையும் நான் இங்கு சேர்க்கவில்லை. பெரிய காரியம் புத்தகத்தில் சில இடங்களில் சமர்பணத்தின் தோல்வி அன்னையின் வெற்றி என்கிறார். அதனால் அன்னையிடம் வந்து 15 ஆண்டு ஆகியும் சமர்ப்பணம் என்றால் என்னவென்று முழுதும் புரியாமல், நானும் செய்கிறேன் என்று செய்து பலன் பெற்றாலும், அதைப்பற்றி முழுதும் அறிய நான் முற்பட்டபோது எனக்குத் தோன்றியதை இங்கே பகிர்ந்து கொள்கிறேன்.

முதலில் சமர்ப்பணம் (Consecration) என்றால் என்ன. அகராதி தரும் பொருள்படி - "இறைவன் வந்து தங்குவதற்கு ஏதுவாக , ஒரு இடத்தைப் புனிதப்படுத்துவது - "உதாரணம் கும்பாபிஷேகம்".

அதையே அன்னைக்காகச் சொல்லும் போது ஒரு இடத்தை, செயலை, அன்னையின் அருள் செயல்படும் இடமாக, அவர் நோக்கமான பரிணாமத்தில் முன்னேற்றம் - evolution நடக்கும் இடமாக, அதற்கு ஏற்ற பண்புகள் இருக்கும் இடமாக மாற்றுவது சமர்ப்பணம்.

இதில் பண்புகள் என்னும் போது முயற்சி, நோக்கம், மனப்பான்மை அன்னைக்கு முக்கியம். உயர் சித்தம் அன்னையின் தேவை. அதற்கு முயல்பவர்கள் யாரும் என் அருளைப்பற்றி கவலைபடத் தேவையில்லை, அது என்றும் அவரைத் தேடி வரும் என்கிறார். அதற்காக நான் காத்திருக்கிறேன் என்கிறார்.

உதாரணமாக நான் படிப்பை சமர்ப்பணம் செய்கிறேன் என்று ஒருவர் சொன்னால் - அதற்கான முயற்சி, நோக்கம், மனப்பான்மைக்கு ஏற்ப நல்ல வேலைக்கு படிப்பு தேவை என்று நினைப்பவர் நல்ல திறமை, திறன் பெறுகிறார். அறிவு வளர படிப்புத் தேவை என்று நினைப்பவர் Consultant, Advisor ஆகிறார். பண்புகள் வளர படிப்புத் தேவை என்று நினைப்பவர் தொழிலதிபர் ஆகிறார். ஞானம் பெற படிப்புத் தேவை என்று நினைப்பவர் ஆன்மீகவாதி ஆகிறார்.

கர்மயோகி  சொல்வது சமர்ப்பணம் செய்து ஒரு செயல் நடந்தால் அதில் தோல்வியில்லாத வெற்றி unfailing success - தவிர வேறு எதுவும் இருக்கக்கூடாது.  அது, ஏதாவது ஒரு பிரச்சினைக்காக இருந்தால் அது போன்ற பிரச்சினை இனி வரவேக்கூடாது என்கிறார்.  ஆனால் எனக்கு அப்படி இல்லை.  சமர்ப்பணம் செய்து நடந்ததாக நினைக்கும் விஷயங்களும் ஒரு புதிய பிரச்சினை கலந்தே வந்திருக்கிறது.  அது அடுத்த கட்ட முன்னேற்றத்திற்கு என்று எடுத்துக்  கொண்டாலும் , அதுவும் இல்லாமல் சமர்ப்பணம் வராதா , அப்படிப்பட்ட பலனை  அது தராதா  என்பது என் கேள்வியாக இருந்தது.  இப்பொது புரிந்து விட்டது என்பதோ நான் நிபுணத்துவம் பெற்று விட்டேன் என்பதோ பொருளல்ல.  புரியாத நிலையிலிருந்து புரிந்து விட்டது, ஆனால் செய்ய முடியவில்லை என்னும் நிலையில் இருக்கிறேன்.  என்றாவது ஒரு நாள் செய்யலாம், செய்ய முடியும் என்ற நம்பிக்கையை அது தருகிறது.

நாம் சமர்ப்பணம் என்றால் என்ன செய்கிறோம் -  எதோ ஒன்றை அன்னையிடம் சொல்கிறோம். ஒரு செயல் நினைவுக்கு வரும் போது அன்னையை நினைக்கிறோம்.  அதையே சமர்ப்பணம் என்கிறோம்.  அல்லது அன்னையிடம் நம் கோரிக்கைகள் அனைத்தையும் வைத்து, முடிந்தால் அதற்கு செய்ய வேண்டிய வழிகளையும் சொல்லிவிட்டு, மனம் முழுக்க எதிர்பார்ப்புடன் இருப்போம். அல்லது நாமாக கல்லூரியில் இடம் தேடினால் அதிக செலவாகும் என்றால், ஒரு அனுமதி பெற அலைச்சல் , செலவு அதிகம் என்றால் அதை அன்னையிடம் சொன்னால், அந்த செலவு குறைவாக அலைச்சல் குறைவாக இருக்கலாம் என்று நினைத்தால் சொல்வோம்.

உண்மையில் சமர்ப்பணம் என்பது  எளிதில் நம்மால் செய்ய முடிந்ததைக் கூட அன்னை வழிக்கு விடுவது,  ஆனால் நாம் நம்மால் எளிதில் செய்ய முடிந்ததை, அல்லது அன்னை நம் விருப்பத்திற்கு எதிராக செய்வார் என்று தெரிவதை நாம் சமர்ப்பணம் செய்ய மாட்டோம்.  சமர்ப்பணம் செய்தால் அதிக பட்சம் கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.  எனக்கு பள்ளிப் படிப்பு கேட்டேன், professional degree கிடைத்தது. டிவிஎஸ் 50 கேட்டேன், கார் கிடைத்தது. இது போல பலருக்கும், மணமகன், மணமகள், தொழில் தகுதிக்கு மீறி அமைந்துள்ளது.  ஆனால் இவையெல்லாம் சமர்ப்பணமா, அருளா? என்ற கேள்வி எழுகிறது.

கர்மயோகி  இதை சமர்ப்பணமோ அருளோ இல்லை என்கிறார். இவை அனைத்தும் அதிர்ஷ்டம் - Luck என்று கூற கூடிய ஒரு நிலை. நம் ஜாதகத்தில் இருக்கும் கெட்டது இருந்தால் அது குறைவாகவும் நல்லது இருந்தால் அது அதிகபட்சமம் நடக்கும் ஒரு நிலை. அன்னையிடம் வைத்த பிறகு  நம் கர்மத்தின் பிடி நம்மை விட்டு விலகும் முதல் நிலை. அன்னையின் மேல் உள்ள நம் பக்திக்கு வாழ்வு தரும் பரிசுகளே அவை என்கிறார்.

உண்மையில், நாம் சமர்ப்பணம் என்று சொல்வதெல்லாம் நம் வேண்டுதல்களே. ப்ரார்தனைகளே . நம் எதிர்பார்ப்பு, ஆசை, ஆகியவற்றை தரச் சொல்லி, முடிந்தால் அதையெல்லாம் நாம் நினைக்கும் வழியிலேயே தரச் சொல்லி வைக்கப்படும் கோரிக்கை மனுக்கள். ஒரு சாதாரண மனிதனின், குடும்பஸ்தனின் கஷ்டத்தை அன்னை புரிந்துக் கொள்கிறார்.

அதை ஏற்றுக்கொள்கிறார். ஒரு சில முறை நம் குணக்கேடுகளையும் மீறி பலிக்கிறார். ஆனால் ஓரிரு முறைக்குப் பிறகு நம் சமர்பணத்தில் ஒரு உயர் சித்தம், ஒரு உயர் மனப்பான்மை, ஒரு உயர் பண்பு தேவை என்னும் நிலைக்கு நாம் வரவில்லையென்றால், அன்னை திரும்பிப் பார்ப்பதேயில்லை. நாம் கேட்பதை கொடுப்பது மட்டுமே அன்னையின் வேலை இல்லை.
அன்னையின் அவதார நோக்கம் திருவுருமாற்றம். அதை விரும்பாதவர்கள் மட்டுமே என்னை வழிபடுவதே போதும் என்று இருக்கிறார்கள். அவர்களை நான் ஊக்குவிப்பதில்லை என்கிறார் அன்னை.

இதிலிருந்து என்ன புரிகிறது என்றால் நம் சித்தம், மனப்பான்மை, பண்புகளுக்கு ஏற்ற நிலைகளிலேயே சமர்ப்பணம் அன்னையால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பலனும் அதற்கு ஏற்றாற் போலவே இருக்கிறது. குறிப்பாக நம் சுபாவத்தில் உள்ள தடைகள், நம் நம்பிக்கைகள், நம் அபிப்ராயங்கள், முன் முடிவுகள், சுக சார்புகள் comfort zones அதை நிர்ணயிக்கிறது.

அப்படியென்றால் சமர்ப்பணம் என்பது அன்னை விரும்பும் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருந்தால் அது உயர்ந்த நிலையில் பலிக்கும் என்றாகிறது. காரணம் சமர்ப்பணம் என்பது ஒரு சமர்ப்பணம் என்பது ஒரு கோரிக்கையை வைத்து அதில் அன்னை செயல் பட அழைப்பது. ஒரு அரசு அலுவலகத்தில் ஒரு கோரிக்கையை வைப்பதற்கும், முதல் அமைச்சர், பிரதம மந்திரி ஆகியோரிடம் ஒரு கோரிக்கையை வைப்பதற்கும் தேவையான மனப்பான்மை, அந்தஸ்து, சட்டங்கள் நமக்குத் தெரியும். ஒவ்வொன்றுக்கும் தேவையான  protocol, நம் தகுதி நிலை, கோரிக்கையின் பலம் அனைத்தும் நிலைக்கு ஏற்ப வேறுபாடும். , அது போல அன்னையிடம் ஒரு கோரிக்கையை வைப்பதற்குத் தேவையான சட்டம் purity (அப்பா purity என்பதை – That which always wishes Divine Will to be established என்று கூறுகிறார்) உன்னுள் எது அன்னையின் விருப்பம் நிறைவேறட்டும் என்று இருக்கிறதோ அதுவே தூய்மையின் இருப்பிடம். purity. அது குறைந்த பட்சம் அன்னை விரும்பும் மாற்றத்தை நம்மிடம் கொண்டு வர வேண்டும் என்னும் தூய எண்ணத்தை உள்ளடக்கிய சமர்ப்பணமாக இருக்க வேண்டும்.. அதை வேறு வகையாக allowing free flow of Divine Force – அன்னையின் சக்தி நம்முள் தடையில்லாமல் பரவ உதவுவது என்று எடுத்துக்கொள்ளலாம் . அது பரவ அனுமதிக்கும் அளவிற்கு அதன் பலனும் இருக்கும். அதுவே அன்னைக்கு சமர்ப்பணம் செய்வது.

சமர்ப்பணம் செய்யும் ஒரு காரியத்தில் அன்னைக்கு எதிரான விஷயங்கள் இருப்பதை அன்னை செயல் பட தடையாக இருப்பதை அவர் சுட்டி காட்டுகிறார். அதுவே நமக்கு வாழ்வில் , பிரச்சினையாக, முரண்பாடாக தெரிகிறது.    அதை மாற்றும்போது சமர்பணத்திற்கான அன்னை சக்தி செல்லும் பாதையை நாம் சுத்தம் செய்கிறோம் என்று பொருள். அல்லது அப்படியே இருந்தால் , அன்னை சக்தி அதை நீக்கவே செலவு ஆவதால் நமக்கு அருள் செயல் படுவது தெரிவதில்லை. அதற்கு உதாரணமாக - வற்றிப்போன ஆறு, ஏரி ஆகியவற்றை எடுத்துக் கொள்ளலாம். அந்த வற்றிய நிலைகளை எல்லாம் நிரப்பி  அதாவது saturate செய்த பிறகு இருக்கும் நீரே நமக்கு தெரிகிறது. அதர்க்கு முன் செலவானது நமக்கு தெரிவது இல்லை.

அதுபோல அன்னையின் சக்தி ஊடுருவுவதைத் தடை செய்வது எது என்று பார்த்தால் நம் சுபாவம், நடத்தை, முன் முடிவு, அபிப்ராயங்கள், விருப்பத்தேர்வுகள் , சுகசார்புகள் என்று ஏராளமானவைத் தடைகளாக, நாம் நினைத்ததும் நடக்காமல், அன்னை நினைப்பதும் நடக்க விடாமல் இருக்கிறது. அன்னை சக்தி, பரிணாம வளர்ச்சிக்கான சக்தி என்பதால் சமர்ப்பணம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் அது வந்து இறங்குகிறது. இறங்கியவுடன் நம் தற்போதைய personality ஏற்க முடியாத , நமக்கு பிடிக்காத ஒரு சூழல், ஒரு மனிதன், ஒரு நிகழ்வு மூலம் அது செயல்பட நினைக்கிறது. அதனால் தான் சமர்ப்பணம் பிடிக்காத விஷயங்கள் மூலம் வரும் ஒரு விஷயத்தை நடத்தி வைக்கும் என்று சொல்லப்படுகிறது. உண்மையில் அது ஒரு திறமை, ஒரு திறன், ஒரு மனப்பான்மை, ஒரு ஞானத்தை அடுத்த நிலையில் தரவே வரும். கர்மயோகி இதை அடுத்த உயர்ந்த நிலைக்கான அன்னையின் அழைப்பு என்கிறார். பிரச்சினை என்பதே நம் இப்போதைய personality கையாளமுடியாத ஒரு நிகழ்வு என்றே கூறுகிறார். காரணம் இதைவிட பெரிய பிரச்சினைகளை எளிதாக கையாண்டவர்களை நாம் பார்த்திருப்போம். அதன் பொருள் நம் personality , நம் சித்தம், , ஞானம் அந்த அளவு வளரவில்லை என்பதே.

நாம் சமர்ப்பணம் செய்து பெற்றதாகச் சொல்பவற்றை கவனித்து, ஆராய்ந்து பார்த்தால் இது புரியும். உண்மையில் அன்னை விரும்பும் “adventure of consciousness ” இது. ஆனால் – நாம் அந்தத் தடைகளை, முரண்பாடுகளை புறந்தள்ளி அதையும் சமர்ப்பணம் என்று சொல்லி, அதையும் அன்னையே செய்வார் என்று எதிர்ப்பார்க்கிறோம். ஒவ்வொரு சமர்பணத்திலும் முன்பு இருந்த மனப்பான்மை, சித்தத்தில் ஒரு இழையாவது முன்னேற்றம் வேண்டும் என்று நினைக்காமல், நான் மனப்பான்மையில், திறமையில், திறனில், நடத்தையில், சித்தத்தில் அப்படியே இருப்பேன் என்றால் முடிவு மட்டும் எப்படி வேறு மாதிரி இருக்கும். விதி வலியது, எதற்கும் ஒரு அளவு உண்டல்லவா என்று சமாதானப்படுத்திக்கொள்வோம். சமர்ப்பணம் பலிக்கவில்லை என்று சொல்லி நாம் வீணே ஏமாற நேரிடும்.

ஆனால் சமர்ப்பணம் செய்தவுடன் நம் சிந்தனை, சூழல் ஆகியவற்றை கவனித்தாலே நாம் செய்ய வேண்டியதை அது சுட்டிக்காட்டுவதைக் காண முடியும். அந்த செயலோடு தொடர்புடைய , அல்லது செயலை நிர்ணயிக்க கூடிய பத்து அல்லது பதினைந்து விஷயங்களை நாம் கவனிக்க முடியும் என்கிறார். உண்மையில் அந்த நிலை insight, intuition போன்ற யோகப் பண்புகளைத் தர முயல்கிறது என்பதே உண்மை. அவை பற்றி பேசுவது இந்த உரையை திசை மற்றும் என்பதால் சமர்பணத்தின் வழிகளை – Process of consecration -ஐ மட்டும் பார்ப்போம்.

இப்போது சொன்ன அத்தனையும் ஆராய்ந்தால் நம் சமர்ப்பணத்தில் நாம் பார்ப்பது – aspiration – நம் அன்னைக்கான ஆர்வம். அப்படிப் பார்த்தால் சமர்ப்பணம் என்பது ஒரு யோக பண்பு, ஆன்மீக முறை என்றாலும் அது ஒரு சட்டத்திற்கு உட்பட்ட ஒரு சக்தி என்பது புரியும். புரிந்தால் ஒரு தேர்வில் வெற்றி பெறுவது போல, ஒரு தேர்தலில் வெற்றிப் பெறுவது போல சட்டங்களையும், முறைகளையும் உள்ளடக்கிய, நம்மை அடுத்த நிலைக்குக் கொண்டுச் செல்லக் கூடிய ஒரு திறனாய்வு என்பது புரியும். முன் சொன்ன free flow of force – அன்னையின் சக்தி செல்லும் வழிகளை அடைக்கும்

அத்தனையும் ஒரு தலைப்பில் கொண்டு வந்தால் அது “அகந்தையின் வடிவங்கள்” என்பதாக இருக்கும். நம் சமர்ப்பணத்தில் எந்த அளவு அகந்தையின் வடிவங்களான முன் முடிவு, அபிப்ராயங்கள், விருப்பத் தேர்வுகள் , சுகச் சார்புகள், எதிர்பார்ப்பு, எதிர்வினை, அன்னை விரும்பாத குணங்கள் , நடத்தைகள், மனப்பான்மை, இல்லாமல் இருக்கிறதோ அந்த அளவிற்கு அது நினைத்தே பார்க்காத அற்புதங்களாக, வியத்தகு நிகழ்ச்சிகளாக நடக்கும். ஆனால் வாழ்வில் பட்ட அடிகளால், எப்போதும் மனதில், உணர்வில், எதிர்வினையாற்றும் சிந்தனையோடு, படுத்துக்கொண்டு இருந்தாலும் கால் ஆட்டிக் கொண்டே இருக்க வேண்டும், இல்லையென்றால் புதைத்து விடுவார்கள் என்னும் உஷார் தன்மையோடு எப்போதும் இருக்கும் என் போன்ற சராசரி மனிதர்கள் அகந்தையின் வடிவங்களிலிருந்து வெளியே வர முடியுமா? என்பதே பெரிய கேள்வியாக இருக்கிறது.

அதற்கு கர்மயோகி  சொல்லும் ஒரு வழி – அன்னை விரும்பும் பண்புகளை அதிகபட்சம் கொண்டு வரும் போது, நம் அகந்தையும் அதன் வெளிப்பாடுகளும் குறைகிறது.  என்பதுதான்.

முதல் நிலையில் அன்னையிடம் நம் விருப்பத்தை சொல்லி விட்டு, நம்மால் செய்ய முடிந்த அத்தனையையும் செய்தல், எவ்வளவு பண்புகளைக் கொண்டு வரமுடியுமா அவ்வளவு பண்புகளையும் கொண்டு வருதல். இதில் விருப்பத்தைச் சொல்லுதல், அல்லது prayer – வேண்டுதல் என்பதை ஒரு மிகப் பெரிய ஆன்மீகச் சொல் என்பதை நாம் புரிந்துக்கொள்ளவில்லை என்கிறார். நாம் சமர்ப்பணம் என்னும் பெயரில் நம் விருப்பத்தையும் அதற்கான வழிகளையும் அன்னையிடம் சொல்கிறோம். பின் அது சம்பந்தமான எதிர்பார்ப்பு, அது தொடர்பான எண்ணங்கள், அனுபவங்கள், என்ன நடக்கும், எது நடக்கும், எப்படி நடக்கும், எப்படி நடக்கக்கூடாது, அதற்கு அன்னை என்ன செய்ய வேண்டும் என்பதையே மனம் மீண்டும் மீண்டும் சொல்லும். அதை விரும்பி ஏற்று ஓரிரு முறை இது எனக்குத் தேவையில்லை என்று அன்னை உருவத்தை நினைப்போம். அதை சமர்ப்பணம் என்று நினைப்போம். அப்படி இல்லாமல் ஓரிரு வரியில் உங்கள் தேவையை அன்னையிடம் சொல்ல முடிந்தால் ( formulating a prayer) அதுவே 75 சதவிகிதம் வெற்றியைத் தரும். மீதி 25 சதவிகிதம் அதற்கு எதிராக எதுவும் செய்யாமல் இருப்பது. அதாவது அந்த காரியம் நடக்க நாம் நம்பும் மனிதர், சக்தி, அந்தஸ்து, பணம், செல்வாக்கு என்று எதையும் நாடாமல், நினைக்காமல் இருப்பது. உதாரணமாக இந்த கல்லூரி , இந்த பாடம் என்று விலாவரியாக விளக்கி கேட்காமல்- என் மகனுக்கு ஒரு நல்ல படிப்பை கொடு என்றால் அதுவே சாதிக்கும். அதையும் தாண்டி இன்னும் சுருக்கமாக என் மகனுக்கு ஒரு நல்ல வாழவைக் கொடு என்றால் அது அனைத்தையும் உள்ளடக்கியது. அது போல என் மகளுக்கு இந்த நிறத்தில், இந்த உயரத்தில், இந்த நாட்டில், இந்த கம்பெனியில் , இவ்வளவு சொத்தோடு வரன் வேண்டும் என்று கேட்பது விட – என் மகளுக்கு நல்ல வாழ்வைக்கொடு என்று கேட்பது சுருக்கம். இங்குத் தான் நான் சொன்ன முதல் நிலை வருகிறது. இத்தகைய வேண்டுதல்களில் நாம் அன்னையை மட்டுமே நம்புகிறோம். அந்த காரியம் நடக்க நாம் நம்பும் மனிதர், சக்தி, அந்தஸ்து, பணம், செல்வாக்கு என்று எதையும் நாடாமல், நினைக்காமல் இருப்பதாய் கவனிக்க முடியும். அது அன்னை சக்தி ஆற்றல் முழுதும் செயல் பட உதவும்.

இரண்டாவது, அன்னைக்காக செய்வதாக நினைத்து செய்வது. அது நம் இருண்ட சுபாவம் அத்தனையையும் அடக்கி வைக்கும். உதாரணமாக நம் வீட்டை நாம் சுத்தம் செய்யும் விதம், அந்த அலட்சியம், மனநிலை ஆகியவற்றையும், தியான மையத்தை சுத்தம் செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தால் அதை சுத்தம் செய்யும் முறையை, மனநிலையை நினைத்துப் பார்த்தால் இது புரியும். அன்னைக்கு என்று செயல் படும் போது நாம் ஒரு உயர்ந்த நிலையில் செயல் படுவது தெரியும்.

மூன்றாவது, அன்னையைச் செய்யச் சொல்லி அதையே நாம் செய்வது. உதாரணமாக லஞ்சம் மிகுந்த அலுவலகத்தில் ஒரு வேலை ஆக வேண்டுமென்றால், நான் முதலில் அதன் அருகில் இருக்கும் பெட்டிக் கடையில் விசாரிப்பேன். டீ , வடை சாப்பிடுவேன். பின் reception அல்லது despatch -ல் என்று முன்னுரிமைக்கு tips கொடுப்பேன். அந்த காரியம் முடிய என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வேன். இதை அப்படியே அன்னையை செய்யச் சொல்வதாக சொல்லி - Mother நேராக இந்த file -ஐ எடுத்துக்கொண்டு பெட்டிக்கடைக்கு செல்லுங்கள். பின் ஒரு டீ , வடை சாப்பிட்டுக்கொண்டே ஆட்களை பற்றி விசாரியுங்கள், யார் முடித்து கொடுப்பார்கள் என்று பாருங்கள், Receptionist அல்லது despatch clerk க்கு ஒரு கட்டிங் கொடுங்கள். பிறகு உயரதிகாரியிடம் சென்று பேசி என்ன செய்ய வேண்டுமோ செய்யுங்கள் என்று அன்னையிடம் சொல்ல முடியாது. Mother இந்த வேலை ஆக வேண்டும், இந்த பிரச்சினை இருக்கிறது. நீங்கள் பேசித் தீர்த்துக்கொடுங்கள் என்றே சொல்ல முடியும். அன்னையை அனுப்புவதனாலும் அதையும் நாம் அறிந்த அன்னை முறைப்படியே செய்வோம். அதன் படியே நாம் செய்வது . நேரே சென்று அந்த அதிகாரியைப் பார்த்து விளக்குவது. முடிவை அப்படியே ஏற்றுக்கொள்வது மூன்றாவது முறை. பலமுறை நான் ஒத்திகைபார்த்த அதே வார்த்தைகளை எனக்கு உரிய சில சொற்றொடர்களை, style களை அந்த அதிகாரி பேசுவதை கவனித்து இருக்கிறேன். பல நேரங்களில் உடல் சிலிர்க்கும்.

நான்காவது, அன்னையே செய்வதாக நினைத்துச் செய்வது. ஒரு விஷயத்தை அன்னை செய்தால் எப்படி செய்வார். அந்த திறமை, திறன், நேர்த்தி, செம்மை, நடத்தை, மனப்பான்மை, உணர்வில், அறிவில், ஆன்மாவில் என்று எப்படி இருப்பார் எப்படி நடப்பார் என்ற நமக்குத் தெரிந்த அளவில் செய்தல். அதாவது குறைந்த பட்சம் உடலில், உணர்வில், அறிவில் , நாம் அறிந்த ஆன்மாவின் பண்புகளை கொண்டு வந்து ஒரு காரியத்தை செய்வது. செய்யும் செயல் அனைத்தையும் நாம் அறிந்த உயர்ந்த நிலையில் செய்வது . நான்காவது முறை.

இந்த நான்கு முறைகளில் எதைச் செய்வதாக இருந்தாலும் அதற்குத் தேவை அன்னைக்கான ஆர்வம். அந்த ஆர்வம் தருவது இடையறாத அன்னை நினைவு, இடையறாத அன்னை நினைவு என்பது சமர்ப்பணம்.

அதற்கு விளக்கமாக கர்மயோகி கூறுவது - மேற்சொன்ன நான்கு மன நிலைகளில் நம் அபிப்ராயங்கள் இல்லை - அதனால் புதியன ஏற்கும் தடை இல்லை. எதிர்பார்ப்பு இல்லை. அதனால் ஏமாற்றம் இல்லை. முன்முடிவு இல்லை, விருப்பத்தேர்வு இல்லை, சுகச் சார்புகள் இல்லை, அதாவது நம்

சுபாவத் தடைகள் பெரும்பாலும் இல்லை என்பதால் அன்னை சக்தி அதிகமாக செயல்பட முடிகிறது. அன்னை விரும்புவதைத் தர முடிகிறது. அதனால் அது சமர்ப்பணமான செயலாக மாறுகிறது. இங்கு நாம் நினைவில் வைத்து கொள்ள வேண்டியது அன்னை தருவதை அன்னை விரும்பும் பண்புகளே பெற முடியும். நம் பண்பின் அளவு அருளின் அளவை நிர்ணயிக்கிறது. 1 கிலோ பிடிக்கும் பையில் 10 கிலோ வைக்க முடியாது என்பது போல, நம் கோரிக்கை எவ்வளவு பெரிதோ அந்த அளவு பண்புகளும் தேவை. உதாரணமாக நம்மை ஒருவர் தூண்டும் போது உள்ளே கொதித்தாலும் வெளியே அமைதி காப்பது முதல் நிலை என்றால், equality - சமநிலை அதன் முடிவான நிலை. அதற்கு ஏற்றாற்போல, அன்னை சக்தி செயல்பட்டு சமர்ப்பணத்தை ஏற்றுக்கொள்ளும்.

நாம் சமர்ப்பணம் என்று சொல்லும் போது , அன்னை சக்தியை அழைப்பது போல, நம் அகந்தையின் சுபாவங்கள் அதன் வெளிப்பாடுகள் ஏராளமான மற்ற சக்தியை அகந்தையின் சக்திகளை அழைக்கிறது. அதை நாம் கவனிப்பதில்லை. எல்லா சக்திகளும் ஒன்றாக வேலை செய்யும் போது ஒன்றை ஒன்று எதிர்க்கவே செலவாவதால், அல்லது அன்னை சக்தி அகந்தையை அடக்க முயல்வதால் பலன் குறைவாகவே கிடைக்கிறது. அதிகபட்ச அன்னை சக்தி அதிகபட்ச அன்னை விரும்பும் பண்புகளாலேயே வரும். அதிக பட்ச பண்புகள் நம் அதிக பட்ச sincerity இடையறாத நினைவு என்பதால் அது சமர்ப்பணமான செயலாக மாறும். எந்த சக்தி அதிகமாக வேலை செய்கிறது என்பதை பொறுத்து பலன் மாறும். ( கிரைண்டர் மிஷின் உதாரணம் ).

பத்து கட்டங்கள் இருக்கிறது என்றால் ஒன்பது கட்டத்தை தாண்டிய நான் பத்தாவது கட்டத்தில் அகந்தையின் சக்தியை அழைத்து விட்டேன். 8 லட்சம் மிஷின் இலவசமாக கிடைப்பது போய் பணம் செலவழித்து பெற வேண்டியது ஆயிற்று. ஆனால் நம்மை அறியாமலே சில இடங்களில் அகந்தையின் சக்திகள் செயல் பட முடியாத நிலையில் இருப்போம். செய்வது அறியா நிலை என்பார்களே அது போன்ற நிலை. கையை தூக்கி விட்ட நிலை . அல்லது அன்னை காலடியில் விழுந்து விட்ட நிலை அந்த நிலைகளில் நாம் பெற்ற பலன்களை ஆராய்ந்தால் இது புரியும். என் வாழ்வில் நடத்த பல உதாரணாகளை கூறி இருக்கிறேன். சமாதி அனுபவம் முதல் , என்னை கொல்ல துரத்தியவர்கள் என்கவுண்டர் - இல் சுட பட்டது வரை ஏராளமான உதாரணங்கள் பலருக்கும் தெரியும். ஒரு சிறு உதாரணம் மட்டும் புரிதலுக்கு தருகிறேன். ( முமபை ஏர்போர்ட் உதாரணம்) .

மொழி பிரச்சினை , ஏர்போர்ட் மானேஜரை பார்க்க முடியாமை , வேறு வழி தெறியாமல் திகைப்பு போன்ற பல காரணங்களால் என் வழிகள் எதையும் செய்ய முடியவில்லை. என்னை அறியாமலே நடப்பது நடக்கட்டும் என்னும் ஒரு நிலைக்கு வந்து விட்டேன். வெறுப்பில் தான் வந்தேன் என்றாலும் அந்த அமைதியும் ஒரு பண்பே. ( அதை cloistered virtue என்கிறார் கர்மயோகி. கட்டாயத்தால் எடுக்க பட்டாலும் அதுவும் பண்பே தன் வேலையை செய்யாமல் இருக்காது என்கிறார். அப்படி நடந்ததுதான் இந்த அருள். இதை சாதாரணமாக நாம் வேறு வழி இல்லாமல் அன்னையிடம் உட்காரும்போது பார்க்கலாம். எல்லா வித பிராத்தனையும் செய்து விட்டு, நம் முயற்சி எல்லாம் செய்து விட்டு ஒன்றும் நடக்காமல் அன்னையிடம் சில நிமிடம்

அமைதியாக உட்காரும்போது அதற்கான வழி தென் படுவது அல்லது காரியமே முடிந்து விடுவது பல முறை  நடந்து இருக்கிறது. அதற்கு காரணம் நம்  எண்ணம் அகந்தை குறிக்கிடாத ஒரு நிலை அன்னைக்கு தேவைப்பட்டதே.

அகந்தை இல்லா நிலையில் சமர்ப்பணம் க்ஷணத்தில் பலிக்கும் என்கிறார். அமைதியில் செய்யப்படும் சமர்ப்பணம் க்ஷணத்தில் பலிக்கும் என்கிறார். அமைதி, அமைதிக்கு பின்னால் உள்ள அமைதி, சமநிலை என்றெல்லாம் கூறுகிறார். அந்த நிலையை அடைய முடியுமா. என் போன்ற சராசரி மனிதனுக்கு எப்போதும் டென்ஷனில் இருப்பவனுக்கு அது முடியது தான். ஆனால்  அதன் அடையாளமாக  கர்மயோகி கூறும்  சில நிலைகளை நாம் அடைய முடியும். உதாரணமாக சமநிலை மற்றும் அமைதியின் வெளிப்பாடாக அவர் கூறுவது , எதிர்வினை ஆற்றாமல் இருப்பது, எதிர்பார்ப்பை  பற்றிய படபடப்பு இல்லாமல்  இருப்பது, நம்மை யாருக்கும் நிரூபிக்க வேண்டிய கட்டாயம் இல்லாமல் இருப்பது , ஆர்குமென்ட் செய்யாமல் இருப்பது , கடமையில் மட்டுமே சிந்தனை இருப்பது போன்ற நிலைகள் மனம் அமைதி அடைந்த நிலைகள் . அந்த நிலைகளை  நாம் வளர்த்து கொள்ள முடியும். நம் நிலை மற்றும்  நம் சித்தம் உயர உயர முழுமை புரியும். அமைதி , சமநிலை தானே வரும். உதாரணமாக எனக்கு பத்திரிகை வைப்பவர்கள்  அவசியம் நான் வர வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். போகவிலை என்றால் மனம் வருத்தம் வரும். அது போல எனக்கு கடிதம் எழுதபவர்கள் உடனடியாக பதிலை எதிர்ப்பார்பார்கள். சில நாட்கள் பதில் அளிக்க வில்லை என்றாலும் ரெஸ்பாண்ட் செய்வதில்லை என்பார்கள். அதுவே கர்மயோகிக்கு பத்திரிகை கொடுப்பதையே , அவர் அதை பெற்றுக்கொள்வதையே பாக்கியமாக நினைப்போம். நானெல்லாம் அவருக்கு கடிதம் போடுவதே எல்லவற்றையும் சரி படுத்தும் என்னும் நம்பிக்கையில் இருந்தவன் . பதிலை கூட எதிர்பார்ப்பதில்லை. காரணம் அவர் பெற்ற  உயர் சித்தம்  அந்த அமைதியை சூழலை வழங்குகிறது. அவர் செய்யும் சமர்ப்பணம் உலக அளவில் பலிக்கிறது. அன்னையின் கருவியாக மாறுகிறார். அதுபோல உயர் சித்தம் பெறுவதற்கான நம் முயற்சிகள் நமக்கு சமர்ப்பணம் பலிப்பதற்கான சூழலை வலுப்படுத்தும். அன்னை வரும் பாதையை  எளிதாக்கும்.

அப்படி இல்லையென்றால் இவற்றைத் தாண்டி, அன்றாட வாழ்வின் தாக்கத்தை , அகந்தையின் வழிகளை மீற  சமர்பணத்திற்கு என்று ஒரு இடத்தை நம்மில் ஏற்படுத்துவது  அதன் அடுத்த கட்டம். - Creating a place of awareness - அது நெற்றி புருவ மத்தியாக இருக்கலாம், நெஞ்சுப் பகுதியாக இருக்கலாம்.  அங்கே சத்தியத்தின் சக்தி, அல்லது அன்னை இருப்பதாக நினைத்து ஒவ்வொரு நினைவு, சொல், ஆகியவற்றை அதனிடம் சொல்லி அதன் ஒப்புதலுடன் செய்வது என்று ஆரம்பித்தால்  சமர்ப்பணம் தானே வரும்.  பொது புத்தி , உள் பார்வை, உள்ளுணர்வு ஆகியவை வளரும்போது அன்னை என்ன சொல்கிறார், எதைச் செய்கிறார், எதற்காக செய்கிறார் என்பது புரியும்.  கர்மயோகி  சொல்லும் விவேகம், பாகுபாடு புரியும்.  It should become our causal plane என்கிறார் கர்மயோகி. உதரணமாக என்னை பொறுத்தவரை , நெற்றி போட்டு , புருவமத்தி, இதயத்திற்கு பின்னால் என்றெல்லாம் என்னால் நினைவு கூற முடிவதில்லை.   அதனால் ஒரு கணம் நிதானித்து , என் பர்ஸில் இருக்கும் அன்னை சிம்பல் டாலர் - இடம் கேட்டு

செய்வது போல கற்பனை செய்வேன். சில வினாடிகளாவது, அமைதி, நிதானம் தருகிறது. அதுவே எனக்கு causal plane ஆக மாறுகிறது. பல இக்கட்டான நேரங்களில் அங்கே ஒரு அதிர்வு ஏற்படுவதை கவனித்து இருக்கிறேன். சரியான வழியை காட்டுவதை, என்னை எச்சரிக்கை செய்வதை கவனித்து இருக்கிறேன்.

அத்தகைய causal plane நம் வாழ்வை நடத்தும் விழிப்புணர்வு தளமாக, அன்னையின் தளமாக இருக்க வேண்டும், உடல், உணர்வு, அறிவு என்னும் தளங்கள் அதனுள் அடங்க வேண்டும். causal plane -ம், subtle plane -ம் எங்கோ இருப்பதாக நினைக்கிறோம். ஆனால் நாம் ஒரு இடத்தை உருவாக்கி அதை அன்னை இருக்கும் இடமாக மாற்றினால் அதை மீறிய சாதிக்கும் சக்தி வேறு எதுவும் கிடையாது. வாழ்வே சமர்ப்பணமான வாழ்வாக இருக்கும்.

சைக்கிக் எஜுகேஷனில் அன்னை சொல்வது போல - ஒவ்வொரு முறை நாம் ஆசைப்படும்போதும், விரும்பும்போதும், செயல்படும்போதும், சாப்பிடும்போதும், தூங்கும்போதும் அதனிடம் கேட்டு செய்யும் போது , நாம் அறிந்த அன்னை வழிகளைச் செய்யும் போது நாம் நம் பழக்கங்கள், அபிப்ராயங்கள், முன் முடிவுகள், சுகசார்புகள், சுயவிருப்பங்கள், ஆகியவற்றிலிருந்து இழை இழையாக வெளியே வருகிறோம். உயர் சித்தத்திற்கு செல்கிறோம். நம் சுபாவத்தில் இருந்து நாம் வெளியே வருவதாக நினைத்தாலும் , உண்மையில் அப்போது வெளியே வருவது நம் ஆன்மா.

பெரிய காரியம் புத்தகத்தில் பல இடங்களில் சமர்பணத்தைப் பற்றி கூறுகிறார்.

சமர்ப்பணம் தான் பெரிய காரியம் - என்பதைத்தான் சூட்சுமமாக பெரிய காரியம் புத்தகத்தில் முதல் ஐம்பது பக்கதில் கூறுகிறார் கர்மயோகி. குறிப்பாக "Being of the Becoming - அதாவது எதுவாக ஆக நினைக்கிறோமோ அது போல இன்றே இருப்பது பெரிய காரியம். பெரிய தொழிலதிபர் ஆகவேண்டும் என்றாலும் சரி, அன்னையே ஆகவேண்டும் என்றாலும் சரி சமர்ப்பணமே அதற்கு வழி. குறிப்பாக சமர்ப்பணம் யோகத்திற்கு உரிய வழியை காட்டுவது பெரிய காரியம். அதற்கு நமக்கு மூலம் தெளிவாக இருக்க வேண்டும். என்கிறார். மூலம் என்று நான் புரிந்து கொண்டது "சத்தியத்தை உலகுக்கு கொண்டு வர முயல்கிறேன்" என்று பகவான் கூறியது. அதுவே வேலை. அதுவே முதலில் ஆரம்பிக்கக் கூடிய பெரிய காரியம். "கைக் குழந்தையை மறக்கும் தாய் உண்டோ" என்று கேட்டு அதை விளக்காமல் நாமே புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார். எந்த அளவு நம்மால் அன்னை விரும்பும் பண்புகளை சத்தியத்தின் வெளிப்பாடுகளை - (manifesting aspects ) நம்மால் கொண்டு வர முடியும் என்பதே முக்கியம் என்பது அதன் பொருள். அதுவே பெரிய காரியம்.

எனக்கு non -reaction என்பதே பெரிய காரியம் என்பதால் அங்கே இருந்து ஆரம்பிக்க நினைத்தேன் . காலையில் office வந்தவுடன் cleanliness , system , organization , என்று எதுவும் சரியாக இருக்காது. நான் deal செய்யும் பொருட்கள், chemical powders , சிறு சிறு consummables என்று மாதம் ஒரு முறை சுத்தம் மற்றும் organize செய்வதே ப்ரஹ்ம ப்ரயத்தனம். தினமும் காலையில்

அதுவே ஒரு தொழிலாளர்களுடன் மோதல், கத்துவது disharmony ஆக மாறும். எல்லாவற்றிக்கும் மேலாக டிராபிக் தரும் டென்ஷன். ஆனால் அது போன்ற வெளி விஷயங்கள் office வீடு என்று எதையும் சரி செய்ய நினைக்காமல் traffic பற்றி கவலைப் படாமல் என்னுள் எந்த அளவு அமைதி கொண்டுவர முடியும் என்று அதில் இருந்து விலகி நிற்க conscious ஆக முயன்ற போது அந்த நிதானம் அன்னை நினைவை அதிகப்படுத்தியது. அதுவே சற்றே சத்தியத்தை அதிகப்படுத்துவதாக நினைக்கிறேன். காரணம் நான் சொல்லாமலேயே இப்போது ஓரளவு சுத்தமாகவும் organized ஆகவும் இருக்கிறது. நான் போகாமலே எல்லாம் ஒழுங்காக நடக்கிறது.

அதுபோல முழு சத்தியதுடன் ஒரு கணம் செய்யும் சமர்பணமும் பல மடங்கு, நாடளவில், உலகளவில் பலிக்கும் என்கிறார். முழு சத்தியம் என்றால் என்ன என்பது புரியவில்லை. Truth - is that, which is without conflict என்னும் சாவித்ரி வரிகளை விளக்கமாக எடுத்து கொள்ளலாம். ஆனால் அது விவாத பொருளாக ஆகும் என்பதால் ஒரு பொய்யும் இல்லாத நிலை என்று எடுத்து கொள்கிறேன். அப்படியென்றால் அப்படி ஒரு சத்தியத்தை கொண்டு வர முடியுமா? அது எளிதாக தெரிந்தாலும், நான் பொய்யே சொல்வதில்லை , குறைந்த பட்சம் சமர்ப்பணம் செய்யும்போது அல்லது அந்த சில மணிகள் பொய்யே சொல்வதில்லை என்று கூறினாலும் சமர்ப்பணம் ஒன்றும் பெரிய அளவில் பலிக்க வில்லை. அது ஏன் என்று ஆராயும் போதுதான் ஒவ்வொரு நிமிடமும் நான் பொய்யில் இருப்பது தெரிகிறது. unconcious ஆக நாம் செய்வதில் எவ்வளவு பொய் இருக்கிறது என்று புரிந்தது. ஆதாயத்திற்காக பொய் சொல்வதில்லை . ஆனால் உண்மையை மறைப்பதுண்டு. சில இடங்களில் innocuous பொய்களை (வராது என்று தெரிந்தும் நாளை நிச்சயம் சரக்கு வரும் என்று கூறுவது, சோம்பேறித்தணத்தால் சிறு விஷயங்களில் கூட நான் ஊரில் இல்லை என்று சொல் என்பது போல - பல பொய்களை சொல்கிறோம் என்றே தெரியாமல் சொல்பவை .) exaggeration- அதிக படுத்தி பேசுதல், கொஞ்சம் தெரிந்து கொண்டு , நிறைய தெரிந்தது போல பேசுவது, பிறர் என்னிடம் கூறியதை cross verify செய்யாமல் அப்படியே பிறரிடம் கூறுவது, பிறர் நம்மை உயர்வாக நினைக்கிறார்கள் என்றவுடன் நமக்கு தகுதி இல்லையென்றாலும் அதை சொல்லாமல் இருப்பது, அதன் மூலம் அவர் எண்ணத்தை உறுதி படுத்துவது. (உதாரணமாக ஒரு engineer ரிடம் flight landing wheel rubber ஆல் வரும் problem பற்றியும் அதை போக்குவது எப்படி என்பதைப் பற்றியும் பேசிய போது அவர் ஆச்சரியப்பட்டு உங்களை Bombay Airport Authority யிடம் introduce செய்து வைக்கிறேன் என்றார். இவ்வளவு அனுபவம் இருப்பவர் இங்கு இருப்பது தெரியாது என்றார். எனக்கு எந்த அனுபவமும் இல்லை என்பதையோ, நான் இது போன்ற வேலைகளை செய்ததில்லை என்பதையோ கிட்டத்தட்ட 60 Lakhs invest செய்து அந்த machine ஐ வாங்கும் capacity இல்லை என்பதையோ நான் கடைசி வரைக் கூறவேயில்லை.). இது போன்று பொய் சொல்வதில்லை என்றாலும் பொய்யாய் ஆமோதிப்பது, இல்லாத தகுதியை, புகழ்ச்சியை ஏற்றுக்கொள்வது என்பது போன்ற மன நிலைகள் ஒவ்வொரு கணமும் இருக்கிறது. அதே போல சற்றே ஒல்லியாகத் தெரிய stripped shirt, foreingers வரும் மீட்டிங்குகளில் சற்றே உயரமாகத் தெரிய high heeled shoe, வீட்டில் அள்ளி போட்டு மொச்சு மொச்சு என்று சாப்பிடும் நான் , மற்றவர்களுடன் சாப்பிடும் போது வாயை மூடி மெதுவாக மென்று நளினமாக சாப்பிடுகிறேன், சற்றே தலைவலி என்றால் கூட மருந்தின் மேல் நம்பிக்கை,

society இன் opinions மேல் நம்பிக்கை, என்பது போன்று ஆயிரம் பொய்கள், இது எல்லாவற்றுக்கும் மேலாக நடத்தை, நாகரிகம் , சமுதாயம் ஆகியவற்றிற்காக நிரந்தரமாக நாம் போட்டுள்ள சில முக மூடிகள் என்று ஒரு நாளில், ஒவ்வொரு  கணமும் ஒரு பொய்யின் உருவம். இதை மனம் ஏற்றுக்கொண்டு இதை எல்லாம் ஒரு யோகப் பயிற்சியாக மாற்ற முயல்வது பெரிய காரியம். அதை அன்னைக்காக செய்வதால் அதுவே சமர்ப்பணம். அது என் ஜீவன் பெறும் சத்தியம். அது க்ஷண  நேரத்தில் சாதிக்கும் என்கிறார்.

இதையே சமீபத்திய நிகழ்வுகளில் பொருத்திப் பார்க்கிறேன்.  நான் அடிக்கடி சொல்லும் flextronix உதாரணத்தில்  real idea என்பது manufacturer's manual  . தரை காய 72 மணி நேரம் வேண்டும் என்பது உண்மை . அது நன்றாகத் தெரிந்தும் பிறரைத் திருப்திப்படுத்த, over confidence or ஏதோ ஒரு பொய் / அகந்தையின் அடிப்படையில் ஒரு முடிவு எடுக்கிறேன்.  ஆனால் மூலத்தின் முடிவுக்கு எதிரானதை செய்ய முடியாது என்னும் உண்மையை - மனம் அறியாமையின் கருவி என்பதால் - உணர முடியவில்லை. பிரச்சனைகள் மூலம் வாழ்வு அதைக் காட்ட நினைக்கிறது.  மனம் உணர்வு mind எல்லாம் அதே நிலையில் நின்று பார்க்க முடியாது என்பதால் அவை சொல்லும் செய்தி சத்தியமாக இருக்க முடியாது.  அதை சத்தியம் நிறைந்த ஜீவனாலேயே அறிய முடியும்.  அதன் மூலம் அனைத்து பரிமாணங்களையும் பார்க்கும் போது மூலத்தின் ஞானம் என்பது புரியவில்லை என்றாலும் அது வெளிப்படும் பண்புகள் புரிகிறது.  Other's point of view , taking responsibility, goodwill to client என்று சிலவற்றை ஏற்கும் போது அடுத்த plane க்கு நகர்கிறோம்.  அங்கு இதுவரை நமக்காக காத்திருந்தது - இதுவரை subtle லில் இருந்தது தெரிகிறது / வருகிறது (எனக்கு my own branded product  ஆக வந்தது  அதுவரை வேறு ஒரு கம்பெனியின் டிஸ்ட்ரிபியூட்டர் ஆக  இருந்த நான் என் சொந்த brand  -இல் தயாரிப்பவனாக மாறினேன். நான் சில டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்களை நியமிக்கும் அளவிற்கு வளர்ந்தேன் ). அது மட்டுமல்லாமல் இது ஒரு quality system ஆகவே நிர்ணயம் t செய்யப்பட்டு நேர்மையான quality contractor கள் மட்டுமே செய்யக்கூடிய நிலையாக .  அதாவது உண்மையை அங்கு கடைபிடிக்கும் அனைவருக்கும் அதன் பலன் கிடைக்கும் என்ற நிலை வருகிறது.  அதற்கு நான் கருவி ஆகிறேன்.

இதில் பெரிய காரியம் என்பது surface level லிலிருந்து subtle level க்கு செல்வது. Surface மிகவும் strong ஆக தெரிகிறது. காரணம் அது physical ஆக கண்ணுக்குத் தெரிவதாக இருக்கிறது - அகந்தை மூலம் பார்ப்பதால் .  subtle ஐ பார்க்க ஆன்மா தேவை.  அதாவது அவற்றின் பண்புகள் தேவை.  அகந்தைக்காகவும் ஆதாயத்திற்காகவும் பார்க்காமல் higher conscious ஆக பார்ப்பது பெரிய காரியம்.  மூலத்தின் தேவையை பார்ப்பது பெரிய காரியம். அதுவே சமர்ப்பணம்.

இங்கு தர்மம், நியாயம், பாவம், புண்ணியம் என்பது இல்லை.  Flex opening date க்காக பாவம் பார்க்காமல் manufacturer இன் எண்ணத்தையே நான் செயல் படுத்தியிருக்கவேண்டும். Mother principles ஐ மட்டுமே அடிப்படையாகக் கொண்டு நடப்பது தூய்மை. இதற்கான process இல் பிறரிடம் நான் காணும் குறையெல்லாம் என் குறையே என்பது புரிவதும்,  அதைக் களைய நான் எடுக்கும் முயற்சிகளும் பெரிய காரியம்.  அதற்கு எதிரான நிலை எடுப்பது

Transformation - பெரிய காரியம் என்று ஸ்மார்ப்பணத்திற்கான பெரிய காரியங்களை கூறுகிறார். .

பொய்யால் சமர்ப்பணம் செய்ய முடியாது. அல்லது சமர்ப்பணம் இருக்கும் இடத்தில் பொய் இருக்காது. Mother ருக்கான என் நன்றியறிதலுக்குப் பின்னும் ஒரு சுயநலம் இருக்கிறது. அதனால் சமர்ப்பணம் மூலம் நான் செய்வது அனைத்தும் அகந்தையின் முயற்சி . வேகமான வளர்ச்சி aspiration ஆல் வரும் போது அந்த இடத்தை அகந்தை எடுக்கும் போது அந்த நிலையை நானே நிலைநாட்டுவேன் என்னும் போது level of consciousness இறங்குகிறது. அந்த நேரத்தில் அதை கவனிப்பது பெரிய காரியம். அந்த aspiration ஐ maintain செய்வது பெரிய காரியம். அந்நிலையில் பொறுமை பெரிய காரியம். ஒரு பெரிய காரியம் அன்பர் வாழ்வில் வர விரும்பும் பொழுது அவர் விலகுவது, அதன் பிறகு வருவது ஆபத்து அழிவு என்னும் ரூபத்தில் வருகிறது. என் வழியில் அப்படி வந்தது சென்னை வெள்ளம். விலக நினைத்தாலும் முடியாமல் திணறி முடிவாக பெரும் பலன் வரும். இதன் மூலம் concentric circle of higher consciousness திறந்து அடுத்த உயர்ந்த நிலைக்குப் போவது பெரிய காரியம். அதன் பிறகு ஆன்மா நம் வேலைகளை எடுத்துச் செய்வது பெரிய காரியம். அதன் மூலம் இறைவன் திருவுள்ளம் நிறைவேறுவது பெரிய காரியம். இதுவே சமர்பணத்திற்கான பாதை.

பெரிய காரியம் தரும் energy என்றும் இதைப் பார்க்கலாம். உதரணமாக தாழ்ந்த மனப்பான்மை அன்னையை விலக்கும் . தாழ்ந்த மனப்பான்மை பெரிய மனப்பான்மையானால் நம் வாழ்வு அன்னை வாழ்வாகும். மனம் பெரியதாகி நோக்கம் பெரியதாகி லட்சியம் பெரியதாவது பெரிய காரியம். அதற்கான சிந்தனைக்கு எனர்ஜி ஐ கொடுத்து, அகந்தைக்கு எனர்ஜி இல்லாமல் செய்வது -பெரிய காரியம் . அதுவே சமர்ப்பணம்.

அன்னைக்கு பரிணாமத்தில் வளர்வது முக்கியம். மனப்பான்மையை உயர்த்துவது என்பது அதன் குறைந்த பட்சம். ஆனால் நாம் ஒரு பிரச்னையில், சமர்ப்பணம் செய்கிறேன் என்று அந்த பிரச்சனை நினைவுக்கு வரும்போதெல்லாம் அன்னையை நினைக்கிறோம். நம் பக்தியால் சில நேரம் அது நடக்கலாம். நடக்காத போது நம் இயலாமையை ஏதோ ஒரு விதத்தில் ஏற்று கொள்கிறோம். இரண்டிலும் அந்த பிரச்சினை வந்த காரணம் அதற்கான எனெர்ஜி தேக்கமாக (dormant) நின்று விடுகிறது. கர்மயோகி சொல்வது சமர்ப்பணமான பிரச்சினை திரும்ப வர கூடாது என்பது. ஆனால் பல முறை திரும்ப வருகிறது. மீண்டும் அன்னையிடம் ஓடுகிறோம். நம் முயற்சி எதுவும் இல்லாமல் பிரச்சினை தீர்வது நமக்கு சௌகரியமாக இருக்கிறது. ஆனால் அதன் மூலம் ஒரு உண்மையை அறிவதில் இருந்து விலகுகிறோம்.

அன்னையின் வேலை நாம் கேட்பதை எல்லாம் தருவதல்ல. அவருக்கு தேவை திருஉருமாற்றம். ஒரு பிரச்சினையை அன்னையிடம் சொன்னபிறகும், சமர்ப்பணம் ஆனதாக சொன்னாலும், ஒரு சிறு இடைவெளியில் சமர்ப்பணம் தவறும்போது கவனித்தால் அந்த தருணத்தில் நாம் மீண்டும் வலி, துன்பம், கவலை, பதட்டம், எதிர்பார்ப்பு மீண்டும் வருவதை காணலாம். அல்லது பொறாமை, பச்சாதாபம், கர்வம் , ஆணவம் என்று எதுவாக வேண்டுமானாலும் வரும். காரணம் அவற்றுக்கான எனெர்ஜி அங்கேயே

இருக்கிறது. அதை நாம் அன்னை என்ற பெயரில், பெரிய போர்வை போட்டு மூடுவது போல மூடுகிறோம்.

அதற்கு பதிலாக சமர்ப்பணம் செய்தாலும் இந்த பிரச்சினை ஏதோ ஒரு வகையில் நான் காரணமாக இல்லாமல் வந்து இருக்காது என்று சிந்திக்க ஆரம்பித்து அதில் நம் எனெர்ஜி ஐ செலவு செய்து முடிந்த வரை அதை கண்டு பிடித்து ( அது தவறாக கூட இருக்கலாம் பரவாயில்லை) அதற்கு எதிரான அன்னைக்கு பிடித்த ஒன்றை அறிவில், உணர்வில் -மனநிலை , திறமை, செம்மை - என்று ஏற்றுக்கொண்டால் நம் low consciousness ஆல் தேங்கிய , மூடி வைக்கப் பட்ட எனெர்ஜி higher consciousness கு செலவாகும் . அப்போது நம் அகந்தையின் வடிவங்களுக்கு அதைப்பற்றிய சிந்தனைகளுக்கு எனர்ஜி இருக்காது. அந்த பிரச்சினை மீண்டும் வாழ்வில் வராது. அன்னை மீதான நம்பிக்கை உயரும்.

கடந்த கால சமர்ப்பணம் என்பதும் இதை ஒட்டியதே. நாம் எந்த அளவிற்கு தீவிரத்தோடு அகந்தையின் வடிவங்களைக்கொண்டு தவறு செய்தோமோ அதே தீவிரத்தோடு ஆன்மாவின் பண்புகளைக் கொண்டு வெளியே வர வேண்டும். அல்லது அதே உணர்வுக்கு இணையாக அதிலிருந்து வெளியே நம் பிரார்த்தனை இருக்க வேண்டும். (relive the sensitivity and intensity of the blunder made). அப்போது தான் அருளைப்பெறும் எனெர்ஜி / ரிசெப்ட்டிவிட்டி அதிகமாக இருக்கும். சமர்ப்பணம் பலிக்கும்.

அன்னைக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற சிறிய அல்லது அடிப்படை ஆசை நம் அனைவருக்கும் உள்ளது. அதை அணைய விடாமல் இருப்பதே முதல் வழி. அதற்கு ஏற்றாற்போல நடக்க வேண்டும் என்பது முக்கியம் என்றாலும் - அதற்கு எதிரான எதையும் செய்யாமல் இருப்பது முக்கியம். உதாரணமாக அறிவில் ஒரு காரியம் நிறைவேற பொய்மையின் வழிகள் பல நமக்கு தெரியும். பதவி, அந்தஸ்து , அதிகாரம், ஜாதி, என்று நமக்கோ அல்லது நமக்கு தெரிந்தவருக்கோ இருப்பதை, லஞ்சத்தை நம்புவதாக இருக்கலாம். உணர்வில் பேச்சு துணை, வெட்டிப்பேச்சு, வதந்திகள், டிவி சீரியல் , கிளர்ச்சியூட்டும் , அல்லது வெறும் பொழுதைபோக்கும் நாவல்கள் என்று அன்னை சூழலை வர விடாமல் தடுக்கும் விஷயங்கள். உடலில், சோம்பேறித்தனம் கொண்டுவரும் கால தாமதம், செம்மை இல்லாமை போன்ற அன்னை பலிப்பதை தடுக்கும் விஷயங்களை செய்யாமல் இருக்கும் முடிவு, உறுதி, சித்தம் முதல் தேவை.

Saving higher consciousness is saving higher force - which is Grace என்கிறார் கர்மயோகி . உயர் சித்தங்களை , மனப்பான்மைகளை அடைவது , அன்னை சக்தியை சேமிப்பது ஆகும். அது வாழ்வில் அருளாக வெளிப்படுகிறது என்கிறார். நம் நிலைக்கு ஏற்றாற்போல அது luck, grace, Mother"s Grace, Super Grace, Supramental Grace என்று வாழ்வில் அற்புதங்களை நடத்தவல்லது. இதுவே வாழ்வு முறையாக மாறும்போது சமர்ப்பணம் சரணாகதியாகிறது. அன்று நாம் அன்னையின் கருவியாகிறோம். அப்போது நம் வாழ்வை நாம் நடத்தவில்லை, அன்னை நம்மை, நம் வாழ்வை, தான் ஏற்று தனக்காக நடத்திக் கொள்கிறார்.

இதற்கான விளக்கம் மேலும் தேவை என்றால் நாம் செய்து பார்த்து, அனுபவித்து, உணர்ந்து தான்  புரிந்து கொள்ள வேண்டும். இந்த யோகத்திற்கு நாமே குரு என்பதால் நமக்கான சமர்பணத்தின் முறை எது என்பதை நாம் தான் முடிவு செய்ய வேண்டும். படிப்படியாக உயர்த்த வேண்டும். அதோடு கர்மயோகி இது பற்றி என்னவெல்லாம் சொல்லியிருக்கிறார் என்று தலைப்பு வாரியாக குறிப்பு எடுத்து எழுதி படித்தாலும் இதை பற்றி அதிகமாக தெரிந்து கொள்ள முடியும்.